01.02.2019.அ.வ.எண்.290/2007

வா.சா.1 தியாகராஜன்

பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை

07.03.2018 அன்று நான் கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ள நிருபண பிரமாண பத்திரிகையில் சொல்லியுள்ளவாறு தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகின்றேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலின்படி தாவா சொத்தில் 4405 சதுர அடி இடத்தை 2007 ஆம் ஆண்டிலேயே கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். தாவா சொத்தான 8720 சதுர அடி இடத்தில் பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி 4405 சதுர அடி இடம் கிரையம் செய்து கொடுத்தது போக மீதமுள்ள 4515 சதுர அடி இடம் 07.09.2007 என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் மூலம் நமச்சிவாயம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். இவ்வழக்கை ஜீன் 2007 ஆம் ஆண்டு தாக்கல் செய்துவிட்டு அதல் இருந்து மூன்று மாத காலத்திற்குள் தாவா சொத்தினை இரண்டு நபர்களுக்கு கிரையம் செய்து விட்ட காரணத்தினாலும் கிரையப்பெற்ற நபர்கள் அதன் அனுபவத்தில் இருந்து வருகின்ற காரணத்தினாலும் இவ்வழக்கை நடத்த எந்தவித உரிமையும் இல்லை என்றும் அதன் அடிப்படையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.